உ

ஓம் குஹாய நம

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவனை நாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம் "

மலர் 2 Vol. 2	ஈஸ்வர வருஷம் பங்குனிமீ 1௨ மார்ச்சு—1938	இதழ் 12. No 12.

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

(26) அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக அகலாதே
அனையுமனை யருகிலுற வெருவியழ வுறவுமழ
அழலினிகர் மறலியெனை யழையாதே
செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியவுயர்
திருவடியி லணுகவர மருள்வாயே
சிவனைநிகர் பொதியவரை முனிவனக மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே
நெறிதவறி யலரிமதி நடுவன்மக பதிமுளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி
நிலவுமறை யவனிவர்க ளலையஅர சுரிமைபுரி
நிருதனுர மறஅயிலை விடுவோனே
மறிபரசு கரமிலகு பரமனுமை யிருவிழியு
மகிழமடி மிசைவளரு மிளையோனே
மதலைதவ ழுததியிடை வருதரள மணிபுளின
மறையவுயர் கரையிலுறை பெருமாளே.

பதவுரை.

சிவனை நிகர் - சிவமூர்த்திக்குச் சமானமானவரும், பொதிய வரை - பொதிய மலையில் வசிப்பவருமாகிய, முனிவன் - அகத்திய முனிவர், அகமகிழ - உள்ளம் மகிழ்ச்சியடையவும், இரு செவி குளிர - அவருடைய இரண்டு செவிகளும் குளிர்ச்சியடையவும், இனிய தமிழ் - இனிமையான தமிழ் மொழியை அம் முனிபுங்கவருக்கு, பகர்வோனே — உபதேசித்தருளியவரே!, நெறி தவறி - அற நெறியினின்றும் வழுவி, அலரி - சூரியன், மதி - சந்திரன், நடுவன் - இயமன், மகபதி - நூறு அசுவமேதங்களுக்குத் தலைவனாகிய தேவேந்திரன், முளரி - அக்கினி, நிருதி - தென்மேற்றிசைக்கு அதிபனாகிய நிருதிதேவன், நிதிபதி - நிதிகளுக்கு அதிபதியாகிய குபேரன், கரிய வனமாலி - கருமை நிறம்பொருந்திய திருமேனியை யுடையவரும் துளபமாலையை யணிந்துள்ளவருமான நாராயணர், நிலவுமறையவன் - நிலைபெறுவராகிய பிரமதேவர், இவர்கள் அலைய - இத்தேவர்களனைவரும் வருந்தி ஏவல்புரிந்துத் திரியுமாறு, அரசு உரிமைபுரி - அரசாட்சி செய்துகொண்டிருந்த, நிருதன் உரம் அற - அசுரனாகிய சூரபன்மனது மார்பு பிளக்குமாறு, அயிலை விடுவோனே - வேலாயுதத்தைப் பிரயோகித்தவரே!, மறி பரசு கரம் இலகு - மான்குட்டியையும் மழுவையும் கரத்தில் தாங்கிக்கொண்டருள்புரியும், பரமன் - பரமபதியாகிய சிவபெருமான், உமை - உமாதேவியார், இருவிழியும் - இரண்டு கண்மலர்களும், மகிழ - மகிழ்ச்சியடைய, மடிமிசை வளரும் - உமையம்மையாரது திருமடியின்மீது வளர்கின்ற, இளையோனே - என்றும் மாறாத இளங் குமாரரே!, மதலை தவழ் - மரக்கலங்கள் தவழுகின்ற, உததியிடைவரும் - சமுத்திரத்தில் தோன்றும், தரளமணி - முத்துமணிகள் புளினம் மறைய உயர் - மணற்குன்றுகள் மறையுமாறு அவைகளுடன் உயர்ந்துள்ள, கரையில் உறை - சமுத்திரக்கரையாகிய திருச்சீரலைவாயிலே எழுந்தருளியுள்ள, பெருமாளே - பெருமையின் மிக்கவரே!, அறிவு அழிய - (அடியேனுக்கு மரணவஸ்தையுண்டாகிற காலத்தில்) அறிவுநிலை கலங்கி அழியவும், மயல் பெருக - மயக்கம் பெருகவும், உரையும் அற - (கைகால்களின் அசைவு நீங்குவதோடு) பேசுவதும் நீங்கவும், விழிசுழல - கண்கள் சுழலவும், அனல் அவிய - உடம்பிலுள்ள அக்கினி தணியவும், மலம் ஒழுக - மலம் தாரைக நீர்போல் ஒழுகவும், அகலாதே - அடியேனைவிட்டு நீங்காமல்,

அன்னையும் - தாயாரும், மனை - மனைவியும், அருகில் உற - சமீபத்தில் அமர்ந்து, வெருவி அழ - பயந்து ஓவென்று கதறியழவும், உறவும் அழ - சுற்றத்தார்களும் அழவும், அழலின் நிகர் மறலி - அக்கினி போல் கொதிக்கின்ற கூற்றுவன், அழையாதே — அடியேனை தனது நரகலோகத்திற்கு வாவென்று அழையாவண்ணம், செறிபுல இருவினை - அடியேனை நெருங்கியுள்ள நல்வினை தீவினைகளாகிய இரு வினைகளும், கரணம - அந்தக்கரணங்களும், மருவு புலன் ஒழிய - பொருந்தியுள்ள ஐம்புலன்களும் செயலற்று நீங்க, உயர் திருவடியில அணுக - தேவரீரது சிறந்த திருவடித்தாமரைகளில் அடியேன் சேருமாறு, வரம் அருளவாயே - அடியேனுக்கு வரத்தை வழங்கியருளுவீர்.

பொழிப்புரை.

சிவபெருமானுக்கு நிகர் என்று எல்லோராலும் கருதப்படுகின்றவரும் பொதியாசலத்தில் தவபுரிந்துகொண்டு வீற்றிருப்பவருமாகிய அகத்தியமுனிவருக்கு அவருடைய உள்ளம் மகிழவும், இருசெவிகளும் குளிரவும், இனிமையான தமிழ் மொழியை உபதேசித்தருளியவரே!. அறநெறி தவறி சூரியன், சந்திரன், இயமன், இந்திரன், அக்கினி, நிருதி, குபேரன், துளபமாலையைத் தரித்துக்கொண்டுள்ள கரிய திருமேனியையுடைய திருமால், நிலைபெற்றுள்ள பிரமதேவர், இவர்கள (சிறைப்பட்டு) நெடுநாளாக ஏவல்புரிந்துகொண்டு ஏங்கியலையுமாறு அரசாட்சிசெய்த சூரபன்மன் மனது மார்பு பிளந்தழியுமாறு வேலாயுதத்தை விடுத்தருளியவரே! மான் மழுவைக் கரத்தில தாங்கிக்கொண்டுள்ள சிவபெருமானும் உமையம்மையாரும் கண்களிக்க உமாதேவியார திருமடித்தலத்தின்கண் வளருகின்ற இளைய பிள்ளையாரே! மரக்கலங்கள தவழுகின்ற சமுத்திரத்தில் தோன்றுகின்ற முத்துமணிகள் மணற்குன்றுகள் மறையுமாறு உயர்ந்துள்ள கடற்கரையாகிய திருச்சீரலைவாயில் எழுந்தருளியுள்ள பெருமையின் மிக்கவரே! மரணகாலத்தில் அடியேனுடைய அறிவு அழியவும், மயக்கம் உண்டாகவும், (கை கால்கள் அசைவறறதோடு) பேசுவதும் ஒழியவும் கண்கள சுழலவும், உடம்பிலுள்ள உதராக்கினிதணியவும், தன்னாலே மலம் நீராகி ஒழுகவும், இந்நிலையிலும் என்னைவிட்டு நீங்காமற்படிக்கு தாயாரும் மனைவியும் அருகிலிருந்து பயந்து ஓவென்று கதறியழவும், சுற்றத்தார்களும அழவும், நெருப்பைப்போல் கொதித்துக்கொண்டு வருமபடியான கூற்றுவன் என்னைத்தனது நரகலோ

கத்திடு அழைக்காவண்ணம், அடியேனை நெருங்கியுள்ள நல்வினை தீவினைகளாகிய இருவினைகளும், அந்தக்கரணங்களும், பொருந்தியுள்ள ஐம்புலன்களும் செயலற்று நீங்க தேவரீரது திருவடி மலர்களில் அடியேன் சேருமாறு வரமருள்புரிவீர்.

விரிவுரை.

அறிவழிய . . . . மலமொழுக :—

ஆன்மா பிரியுங்காலத்தில் அறிவுகெட்டு மயக்கமுற்று நாவுகுழறி அவயவங்கள் அசைவற்று புலன்கள் கலங்கி துன்புறுவார்கள்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட
டைம்மே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வா
னமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந்
திருவையாறே

—(சம்பந்தர்) தமிழ்மறை.

அனையுமனை . . . உறவுமற :—

தாய மனைவி மக்கள் முதலியோர் உயிர்பிரியும்போது கதறியழுவார்களேயன்றி உயிர்க்கு உறுதிபயக்கும் தன்மையைத் தேடமாட்டார்கள். இயமனுடைய பாசக்கயிற்றினின்றும் விடுவிக்கவும் ஆற்றலற்று வாளா வருந்துவார்கள். அம்மரணகாலத்தில் காப்பாற்ற வல்லவர் முருகவேள் ஒருவரேயாவர்.

"முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு
முதுவடவை விழிசுழல வருகாலர் தூதாகெட
முடுகுவதும் அருணெறியி லுதவுவதும்"

— வகுப்பு.

"ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன்றன் அடைக்கலமே"

—அலங்காரம்.

அழலின்கா மறலியெனை யழையாதே :—

தீவினையைச் செய்த பாவிகளை இயமதூதுவர்கள் வடவாமுகாக்கினிபோற் கொதித்துப் பாசக்கயிற்றால் இறுக்கிக்கட்டிக்கொண்டு

தமது யமபுரம் கொண்டுபோய்த் துன்புறுத்துவார்கள். புண்ணியஞ் செய்தவர்களை தேவதூதுவர்கள் உபசரித்து சுகமான வழியில் கொண்டுபோவார்கள்.

யமலோகத்திற்கும் மனிதலோகத்திற்கும் இடையிலுள்ள வழி எண்பத்தாறாயிர யோசனை தூரமாகும். அவ்வழியானது காடாகவும் கோரமாகவும் நாற்புறங்களிலும் தண்ணீரில்லாத வெளியாகவும் இருக்கிறது. அந்த வழியில் மரங்களின் நிழல் கிடையாது; தண்ணீருமில்லை; களைப்படைந்தவனும் இளைத்தவனுமான மனிதன் இளைப்பாறுதற்க்க வீடுகளுமில்லை. யமனுடைய கட்டளையைச் செய்கின்ற யமதூதர்களால் ஆடவரும் மகளிரும் அப்படியே பூமியிலுள்ள மற்றவைகளும் அந்தவழியில் பலாத்காரமாகக் கொண்டுபோகப்படுகிறார்கள். எந்த மனிதர்கள் ஏழைகளுக்குக் யானை குதிரை முதலிய வாகனங்களைக்கொடுத்து உதவிசெய்கின்றார்களோ அவர்கள் அந்த வாகனங்களின்மேல் அந்தவழியில் துன்பமில்லாமற் செல்லுகிறார்கள். குடையைத்தானஞ்செய்தவர்கள் குடையினால் வெயிலைத் தடுத்துக்கொண்டு செல்லுகிறார்கள். அன்னதானஞ் செய்தவர்கள் அந்த வழியில் அன்னத்தைப் புசித்துக்கொண்டு பசியின்றி செல்லுகிறார்கள். வஸ்திரங்களைக் கொடுப்பவர்கள் வஸ்திரமுள்ளவர்களாகவும், வஸ்திரம் கொடாதவர்கள் ஆடையின்றி நிர்வாணர்களாகவும் செல்லுகிறார்கள். பொன்னைக் கொடுத்தவர்கள் அலங்கரிக்கப்பட்டவர்களாக சுகமாகச் செல்லுகிறார்கள். பூதானஞ் செய்பவர்கள் விரும்பின எல்லாவற்றையும் அடைந்து இன்புற்று இனிது செல்லுகிறார்கள். தானியங்களைக் கொடுக்கிற மனிதர்கள் துன்பமின்றிச் செல்லுகிறார்கள். வீட்டைத் தானஞ் செய்கிற மனிதர்கள் விமானங்களில் மிக்க சுகமாகச் செல்லுகிறார்கள். தண்ணீரைத் தானஞ் செய்தவர்கள் தாகமில்லாதவர்களாகவும் மிக மகிழ்ந்த மனமுள்ளவர்களாகவும் செல்லுகிறார்கள்; விளக்குதானஞ் செய்பவர்கள் பிரகாசமுள்ள வழியில் பிரகாசமுள்ள உருவத்துடன் செல்லுகிறார்கள்; கோதானஞ் செய்தவர்கள் எல்லாப் பாவங்களாலும் விடுபட்டு சுகமாகச் செல்லுகிறார்கள். ஒரு மாதம் உபவாச மிருப்பவர்கள் அன்னங்கட்டிய விமானத்தின்மீது செல்லுகிறார்கள். ஆறுநாளுக்கொருதரம் உபவாச மிருப்பவர்கள் மயில்கள் பூட்டின விமானங்களின் மேல் செல்லுவார்கள். எந்த மனிதன் ஒருவேளை சாப்பிட்டுக் கொண்டு மூன்று இரவுகளைக் கழிக்கிறானோ? இடைவேளைகளில்

சாட்சிநிறதில்லையோ அவனுக்கு அழிவற்ற லோகங்கள் கிடைக்கின்றன. தண்ணீர்ப்பந்தல் வைத்து கோடைக் காலத்தில் தண்ணீரால் வாடும் மக்களுக்குத் தண்ணீரும் மோரும் கொடுத்து உதவிய உத்தமர்களுக்கு அந்த யமலோகத்தில் புஷ்போதகை என்ற நதியை யுண்டாக்கிக் கொடுப்பார்கள் அந்த நதியில் அவர்கள் அமிர்தம் போன்ற குளிர்ந்த தண்ணீரைக் குடித்துக்கொண்டு சுகமே யிருப்பார்கள். எவர்கள் தீவினைகளைச் செய்தவர்களோ அவர்களுக்கு அந்த நதியில் சீயானது குடிப்பதற்கு ஏற்படுத்தப்படுகிறது மாமிசங்களை தின்றவர்கள் யமலோகத்தில் தம்முடைய மாமிசத்தை தாமே யுண்டு தங்களுடம்பில் வடியும் உதிரத்தைக் குடித்துக்கொண்டு தீவாய் நரகத்தில் மல்லாக்கப்படுத்த வண்ணமாகப் பெருந் துன்பத்தை யனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இவற்றையெல்லாம் உணர்ந்து நாம் நல்வழிப்படுமாறு நமது பரம குருமூர்த்தியாகிய அருணகிரிநாத சுவாமிகள் நம்மீதுள்ள பெருங் கருணையால் உபதேசிக்குமாறு காண்க.

கிழியும்படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்படக் கூற்றுவ னூர்க்குச் செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

—அலங்காரம்.

செற்பு மிருவினை கரண . . . . . அனுக்கிரகம்:—

இருவினையொப்பு, மலபரிபாகமுற்று சத்திநிபாதமடைந்த பக்குவ ஆன்மாக்களே இறைவன் திருவடியில் இரண்டறக்கலந்து அத்துவித முத்தியின்பத்தை நுகர்ந்து பிறவாநிலையைப் பெறுவார்கள். அவ்வரத்தை ஆண்டவன்பால் வேண்டுகின்றனர்.

சிவனை நிகர் பொதியவரை முனிவன் .—

பருவத வேந்தனுக்கு அவன் செய்த தவங்காரணமாகத் திருமகளாகத் தோன்றி வளர்ந்த உமாதேவியாரைச் சிவபெருமான் திருமணஞ் செய்துகொள்ளும்பொருட்டு இமயமலையில் எழுந்தருளிய ஞான்று, திருக்கல்யாணத்தைச் சேவிக்கும்பொருட்டு எப்புவனத்திலுமுள்ள யாவரும் வந்து கூடினமையால் இமயமலை நடுங்கியது. பூமியின் வடபால் தாழ, தென்பால் மிக உயர்ந்தது. உடனே தேவர்கள்முதல் அனைவரும் ஏங்கி, 'என் செய்வது' என்று துன்புற்று "சிவா சிவா" என்று ஓலமிட்டார்கள். சிவபெருமான் அது

கண்டு திருமுறுவல்செய்து, அவர்களது குறையை நீக்கத் திருவுளங்கொண்டு, திருநந்திதேவரை நோக்கி "அகத்திய முனிவனை இங்கு அழைத்துவா" என்று பணித்தருளினார். நந்திதேவர் வணங்கிக்கொண்டுபோய் அகத்தியமுனிவரைக்கூவ, அவர் அங்கு வந்தார். அவரை அழைத்துக்கொண்டுபோய்ச், சிவபெருமான் திருமுன்பு விடுப்ப, அகத்தியர் ஆலமுண்ட அண்ணலை வணங்கி அஞ்சலியத்தராய் நிற்ப, சிவபெருமான் திருமுனிவரை நோக்கி, "முனிவனே! இங்கே யாவரும் வந்து கூடினமையால், வடபால் தாழ்ந்து தென்பால் உயர்ந்துவிட்டது, இதனால் உயிர்கள் மிகவும் வருந்துகின்றன ஆதலால் நீ இமயமலையினின்று நீங்கித் தென்றிசைக்குச் சென்று பொதியமலையின்மேல் இருக்கக்கடவாய்; நின்னைத்தவிர இதனைச் செய்யவல்லவர் வேறு யாருளர்? நீ ஒருவனே பொதியாசலஞ் சேர்ந்தால் பூமி சமமாகும்" என்று பணித்தருளினார். அதுகேட்ட அகத்திய முனிவர் அச்சமுற்று, "பரமகருணாநிதியாகிய பரமபதியே! அடியேன் யாது குற்றஞ்செய்தேன்? தேவரீரது திருமணக்கோலத்தைக் காணவொட்டாமல் கொடியேனை விலக்குகின்றீர்; எந்தையே! திருமாலிருக்க, திசைமுகன் முதலிய தேவர்களிருக்க, எளியேனை விலக்குவது யாது காரணம்?" என்று பணிந்து உரைத்தார். சிவபெருமான், "மாதவ! உனக்கு ஒப்பான முனிவர்கள் உலகத்தில் உண்டோ? இல்லை; பிரமனும் மாலும் நினக்கு நிகராகார்; ஆதலால் நீ நினைத்ததை யாவையும் தவறின்றி முடிக்கவல்லை; இவ்வரிய செய்கை மற்றைத் தேவர்களாலேனும் முனிவர்களாலேனும் முடியுமா? யாவரினும் மேலாகிய உன்னாலே மாத்திரம் முடியும்; செல்லக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அகத்திய முனிவர், "எமது பரம பிதாவே! தங்களுடைய திருமணக் கோலத்தை வணங்காது பிரிதலாற்றாமையால் என்மனம் மிகக் கவல்கின்றது" என்ன, கைலாசபதி, "குறுமுனிவ! நீ கவலாது பொதிய மலை செல்லுதி; நாம் அங்குவந்து நமது கல்யாணக்கோலத்தை காட்டுவோம்; நீ மகிழ்ந்து தரிசிக்கக்கடவை, நீ நம்மைத் தியானித்துக் கொண்டு அங்கு சிலநாட் டங்கியிருந்து, பின்பு முன்போல் நமது பக்கத்து வருவாயாக" என்று அருளிச்செய்தார்.

அகத்திய முனிவர் அதற்கிசைந்து, அரனாரை வணங்கி விடைபெற்று, பெருமூச்செறிந்து அரிதினீங்கி, தென்றிசையை நோக்கிச் சென்று பொதிய மலையை யடைந்து, சிவமூர்த்தியைத் தியானித்

தம்பொருட்டுத் தம்பொதியமலையில் எழுந்தருளியிருந்தார்; பூமியுஞ் சமமாயின. அமரர்கள் துன்ப நீங்கி இன்புற்றனர். என்னே! அம் முனிவரின் பெருமை? ஏலவறுதி வானவராலும் முனிவர்களாலும் செய்தற்கரிய அரிய செயலைச் செய்ததனால் இங்ஙனம் அருணகிரியார் "சிவனை நிகர் பொதியவரை முனிவன" என்று ஓதியருளினார். வடபாகத்தில் கைலாயமலையில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதுபோல தென்பாகத்தில் அகத்தியமுனிவர் எழுந்தருளியிருப்பதால் "பொதியவரை முனிவன்" என்ற குறிப்பும் உணர்த்த கிடமாயமைந்துள்ளனர.

இனிய தமிழ் பகர்வோனே.—

அகத்தியருக்கு முருகப்பெருமான் இனிய தமிழ்மொழியையும் அதன் இலக்கணத்தையும் உபதேசித்தருளினார். இதனால் தமிழ் மொழி ஏனைய மொழிகளினும் உயர்ந்த மொழியென்பதும், அதன் ஆசிரியர் முருகப்பெருமானே என்பதும், அதனை உலகிற்கு உபகரித்த சந்தானாசாரியர் அகத்தியர் என்பதும் நன்கு புலனாகின்றன.

நெறிதவறி . . . . . அழியவிடுவோனே —

சூரபன்மன் சிவமூர்த்தியிடம் பலவரம்பெற்று, உளந்தருக்கி இந்திரன் முதலிய இமையவர்கள் மீன் பிடிக்கவும், வருணன் தண்ணீர் தெளிக்கவும், பிரமன் நாள் கோள் முதலியவற்றைச் சொல்லவும், திருமால் கேட்ட வரங்களை நல்கவும், வாயு வீதிகளைக் கூட்டவும், சூரியன் தன் மண்டலத்திற் செல்லாது வீரமாமகேந்திரபுரியில் தேரைவிட்டிறங்கி குறைந்த கிரணங்களை வீசிக்கொண்டு நடந்து செல்லவும், சந்திரன் எந்த நாளிலும் பூரணகலைகளுடன் பிரகாசித்துக்கொண்டிருக்கவும், இயமன் எந்த உயிரையும் பறியாமலிருக்கவும், அக்கினி கனற்றாமல் எரியவும், பிறதேவர்கள் தத்தமக்குரிய வேலைகளைச் செய்யவும், ஆணைசெலுத்தி, அவர்கள் பலநாளாய் அலைந்துதிரியுமாறு கொடுமைசெய்ததால், குமாரக்கடவுள் தேவர்கள் துன்பத்தைத் தீர்க்குமாறு திருவுளங்கொண்டு, சூராதியவுணரையழித்து ஆட்கொண்டனர்.

கருத்துரை.

அகத்தியமுனிவருக்கு இனிய தமிழை உபதேசித்தவரே! நெறி தவறிய சூராதியவுணரை யழித்தவரே! உமாதேவியாரது திருக்குமாரரே! திருச்செந்திலாதிப! மரணகாலத்தில் பொறி புலன்கள் கலங்கி அடியேன் செயலற்றுக் கிடக்குங்காலத்தில், என் மனைவி மக்கள் கதறியழ இயமன் என்னை அழைக்காவண்ணம் தேவரீரது திருவடியிற் சேர்த்தருள்வீர்.

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்ரம்.

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

(325-ம் பக்கத் தொடர்ச்சி.)

जयानन्द भूमन् जयापार धामन्
जयामोघ कीर्ते जयानन्दमूर्ते ।
जयानन्दसिन्धो जयाशेषबन्धो
जय त्वं सदा मुक्ति दाने श सूनो ॥

(32) ஜயானந்த3 பூ4மன்! ஜயாபார தா4மன்!
ஜயாமோக4 கீர்த்தே! ஜயானந்த3 மூர்த்தே!
ஜயானந்த3 ஸிந்தோ4! ஜயா சேஷ ப3ந்தோ4!
ஜயத்வம் ஸதா3 முக்தி தா3னேச ஸூனோ! ||

பதவுரை.

ஹே ஆனந்த பூமன்! ஜய! - இன்பத்திற் கிருப்பிடமே! தேவரீர் வாழ்ந்திருக்கவேண்டும்,

ஹே அபாரதாமன்! ஜய! - அளவற்ற காந்தியுள்ளவரே! அல்லது அளவற்ற ஆலயங்களை யுடையவரே! தேவரீர் வாழ்ந்திருக்கவேண்டும்,

ஹே அமோக கீர்த்தே! ஜய! - அழியாப் புகழ்படைத்தவரே! தேவரீர் எப்போதும் வாழ்ந்திருக்கவேண்டும்,

ஹே அனந்த மூர்த்தே! ஜய! - அளவிறந்த வடிவத்தை யுடையவரே! தேவரீர் என்றென்றும் வாழ்ந்திருக்க வேண்டும்,

ஹே ஆனந்த ஸிந்தோ! ஜய! - ஆனந்தக்கடலே! தேவரீர் சதாகாலமும் வாழ்ந்திருக்கவேண்டும்!

ஹே அசேஷ பாதோ ! ஜய ! - உலகத்திற்கெல்லாம் பாதுவே ! தேவரீா
எந்நாளும் வாழ்ந்திருக்கவேண்டும்,
ஹே முக்திதான சசஸூநோ ! த்வம ஸதா ஜய! - ஓ முத்தியை யளிப்பவரே!
பரமசிவனுக்குப் புத்திரரே ! தேவரீா
எக்காலமும் வாழ்ந்திருக்கவேணடும.

பொழிப்புரை.

ஓ முக்தியை யளிக்கும் முருகக்கடவுளே ! ஆனந்தத்திற்கு இருப்பிடமானவரும், அளவிறந்த காந்தியும், அழியாப் புகழும், அளவிறந்த வடிவமும் படைத்தவரும், உலகிறகெல்லாம் உறைவினருமாகிய தேவரீர் எக்காலமும் வாழ்ந்திருக்கவேண்டும.

சுவாமியானவா பக்தர்களை அனுக்ரகிக்கச் சதாகாலமும் இவ்விடத்திலேயே எழுந்தருளியிருக்கவேண்டும் என்ற இந்நூலாசிரியரின் பிரார்த்தனையே இது.

भुजङ्गाख्यवृत्तेन क्लृप्तं स्तवं यः
पठेद्भक्ति युक्तो गुहं सं प्रणम्य।
सपुत्रान् कलत्रं धनं दीर्घमायुर्
लभेत् स्कन्दसायुज्यमन्दे नरःसः ॥

பலசுருதி

(33) பு[4]ஜங்கா[3]க்ய வ்ருத்தேன க்லுப்தம் ஸ்தவம்ய:
படே[2]த் ப[4]க்தி யுக்தோ[3] குஹம் ஸம்ப்ரணம்ய |
ஸபுத்ரான் களத்ரம் த[4]னம் தீ[4]ர்க[4] மாயுர்
லபே[4]த் ஸ்கந்த[3] ஸாயுஜ்ய மந்தே நர:ஸ: ||

பதவுரை.

ய: குஹம் ஸம்ப்ரணம்ய - எந்த மனிதன் முருகக கடவுளை நமஸ்கரித்துக்கொண்டு,
பக்தி யுக்த : - பக்தியோடு கூடினவனாய்,
புஜங்காக்யவ்ருத்தேன க்லுப்தம் - "புஜங்கப்ரயாதம்" என்னும் யாப்பினால் அமைக்கப்பெற்ற,
ஸ்தவம் படேத் - ஸ்தோத்திரத்தை ஓதுவானோ,

௨

ஓம் குஹாய நம.

கந்தர் திருவிளையாடல்

(533-வது பக்கத்தொடர்ச்சி)

ஆறு சமயங்களுக்குந் தலைவனும், ஆறெழுத்தை யன்பினுடன் கூறுமவர் சிந்தை குடிகொண்டோனுமாகிய ஆறுமுகக் கடவுள், உள்ளுவார் வினையகற்றும் வெள்ளியம் பொருப்பின் முன்வாயிலின் திருமண்டபத்தின்கண், வீரவாகு தேவர் முதலிய ஒன்பான் துணைவரும், இலக்கஞ் சேனைவீரர்களும் புடை சூழ்ந்து போற்றிநிற்ப வீற்றிருந்தருளினார். அத்தருணத்தில் வீணைவல்லோராகிய நாரத முனிவர், கங்கைசூடிய மங்கைபங்காளருக்கு உவகையுண்டாகுமாறு ஒரு வேள்வி செய்ய விரும்பினார் அந்தணர், இந்திரன், அருந்தவர் அயன் அரி முதலியவர்களுடன் பூவுலகின்கண் யாகத்திற்கு இடம் வகுத்து, வேதாகம விதிப்படி செய்யத்தொடங்கினார். அவ்வாறு செய்யும்போது மந்திர மாறுபாட்டால் யாகாக்கினியினின்றும் செவ்வானம்போன்ற நிறத்துடன் ஓராட்டுக்கடா தோன்றியது. அதன் கோரவடிவத்தையும் பெருஞ்சினத்தோடு செய்யும் ஆரவாரத்தையும்

ஸ:புத்ரான், களத்ரம், தனம், தீர்க்கம் ஆயு. - அவன் புத்திரர்கள், மனை, பொருள், நெடுங்கால வாழ்வு இவை களையடைந்து,

அந்தே ஸ்கந்த ஸாயுஜ்யம் லபேத் - முடிவில் முருகப் பெருமானுடைய ஸாயுஜ்ய முத்தியையும் அடைவான்.

பொழிப்புரை.

எவனொருவன் சுவாமியை வணங்கிப் பக்தியோடு இந்த ஸ்தோத்திரத்தைப் படிப்பானோ அவன் தனதான்ய புத்திர களத்திராதிகளுடன் நெடுநாட்கள் இவ்வுலகில் வாழ்ந்திருந்து முடிவில் முருகப்பெருமானது திருவடி நிழலையடைந்து அழியாப் பேரின்ப சுகத்தையும் அனுபவிப்பான்.

ஸ்ரீ சுப்ரஹ்மண்ய புஜங்க ஸ்தோத்திரம்
முற்றிற்று.

கண்டு அங்குள்ளார் அனைவர்களும் அஞ்சி நடுங்கினார்கள். அந்த ஆட்டுக்கடா தோன்றியதை ஆராயுங்காலத்து, "பூமியினகண் சிலர் வேதியரென்றிருப்பார் வேதத்தினுட் பொருளையறியாமல், பசு நிருட பந்தம், பௌண்டரீகம், அசுவமேதம், அஜமேதம் முதலிய பெயர் களை வைத்துக்கொண்டு, நம்மினத்தவராம் ஆடுமுதலியவற்றை வதைக் கின்றனர். இனி அவ்வதைகளுக்கு இருப்பிடமாகிய யாகங்களையே புரியாவண்ணம் இந்த குழுமியுள்ள யாவரையும் வேரோடழித்துப் பழிக்குப்பழி வாங்குவேன்' என்று புறப்பட்டது போலிருந்தது.

ஆட்டுக்கடாவானது அண்ட கோளகையும் வெடித்துத் துக ளாகவும்; அஷ்டகுலாசலங்கள் அசைந்தாடவும் ஆர்த்தது. தலை யைச்சாய்த்து வயிரத்திற்கு நிகரான கொம்புகளை நிலத்திற் குத்தித் தூளி கிளப்பியது. யுகமுடிவில் தோன்றும் சண்டமாருதமும், வடவா முகாக்கினியையுங் குளிரவைக்கும் ஊழித்தீயும், ஏழு மேகங்களும, ஏழு கடல்களும ஒன்றுகூடி முழங்கிவருதல்போலச் சீறிக் குதித்து வருவதைக்கண்ட நாரதர் முதலியோர் நடுநடுங்கி, யாகத்தைவிட்டு 'உயிர்பிழைத்தாற் போதும' என்று ஏங்கி, மனங்கலங்கி ஓடினர்; அங்ஙனம் ஓடுகின்றவர்களைக்கண்ட ஆட்டுக்கடா பின் தொடர்ந்து கொம்புகளால்குத்திச் சிலரைக் கொன்றது; சிலர் காலொடிந்தார்; சிலர் குடல் கிழியப்பெற்றார், சிலர் கரமிழந்தனர். இவ்வாறு ஆட்டுக் கடாவானது உயிர்களுக்குத் துன்புறுத்தி உலகமெங்கும் உலாவி யது; உலகங்கள் நடுங்கின, அநேக வுயிர்கள் மாண்டன அத்தகர் ஆகாயத்திற் பாய்ந்து சூரிய சந்திரர்களது தேர்களையழித்து அவை களிற் பூட்டிய குதிரைகளுடன் போர்புரிந்தது. தனக்கு எதிர்ப் பட்டவரையெல்லாம் கொம்பாற் குத்திக்கொன்று திசைகள் சுழலத் திரிந்தது.

இப்பெரும் விபத்தைக்கண்டஞ்சிய நாரதர் முதலியோர் விரைந் தோடி, சகலருக்கும புகலிடமாகிய கண்ணுதற்கடவுள் வீற்றிருக் கும் கயிலைமலையை யடைந்து, திருமலையின்மீது ஏறிவரும்போது, ஆங்கே எல்லா ஆற்றலும் எல்லா முதன்மையும் எல்லா அனுக்கிரகமு முடைய எந்தை கந்தவேள் எழுந்தருளியிருக்கக்கண்டனர். சந்தி ரனைக்கண்ட சமுத்திரம்போல் உவகைபொங்க உளமகிழ்ந்து, "நாம் ஐம்முகச்சிவனிடஞ் செல்லவேண்டாம், அறுமுகச்சிவனே ஈண்டு இலக்கத்தொன்பான் வீரர்களுடன் திருவிளையாடல் செய்தருளுகின்

ளார். சேய்களின் குறைகளை நீக்கத் தாய் வலிந்துவருதல்போல் நமது இன்னலை நீக்க எம்பெருமான் நம்மெதிரே எழுந்தருளிவந்தனர்; இவர் சிறுவரல்ல; இந்திரன் முதலிய இமையவர்களைக்கொன்று மீளவும் உய்வித்த முழுமுதற்கடவுள்; நமது இன்னலை இவர் எளிதில் நீக்குவர், இப்பெருமானது சரணாரவிந்தங்களை நாடொறுங்கப் போற்றி செழுந்தன்னை பணியப் புரிவோம்" என்று தங்களுள் உணர்ந்து, நம்பினோர்க்கருளும் எம்பிரான் திருமுன்சென்று அப்பரம பதியின் பாதபங்கயங்களை அடியற்ற மரம்போல் வீழ்ந்து, வலமிட்டுத் துதிப்பாராயினார்.

மூவர்கள் முதல்வா போற்றி முக்கணர் மதலாய் போற்றி
சேவலங் கொடியாய் போற்றி சிறந்த சிற்பரனே போற்றி
தேவர்கள் தேவே போற்றி தெய்வநாயகனே போற்றி
ஆவலும் அருள்வாய் போற்றி அறுமுகா போற்றி போற்றி

என்று முறையிட்டு நின்றனர். கந்தப்பெருமான அவர்களுடைய துன்பத்தைக்கண்டு, "அஞ்சாதொழிமின்கள்; அஞ்சாதொழிமின்கள்" என்று அபயமளித்தருளி, 'நீங்கள் மிகவும் வருந்தினீர்கள்; நமக்குற்ற துன்பம் யாது? சொல்லுங்கள் என்று அறியார் போல் வினவியருளினார். தேவர்களும் முனிவர்களும் அது கேட்டு, "எந்தையே! தேவரீர் அறியாததொன்றுளதோ? அடியேங்கள் வேதவிதிப்படி ஒரு வேள்வி செய்தோம்; அந்த யாகாக்கினியினின்றும் ஓராட்டுக்கடா தோன்றி எம்மைக் கொல்ல யத்தனித்தது. அதனால் யாங்கள் பெருந்துன்பமுற்று இங்கு வந்தோம், அது கோபத்தோடு அநேகரைத் துடர்ந்துபோய்க் கொன்றும், அநேகரை வருத்தியும், உயிர்களுக்கு ஊறுவிளைத்துக்கொண்டு உலகமெங்கணுந் திரிகின்றது; விண்ணிலும் மண்ணிலும் பல வுயிர்கள் மாண்டன. இன்னும் ஒரு நாழிகைக்குள் எல்லா உயிர்களும் இறந்துவிடுமென்பது ஒருதலை. உய்வகையறியா அடியேங்கட்குத் தெய்வநாயகராம் தேவரீரே புகலிடமாம். எமது துன்பத்தை நீக்கிக்காத்தருளவீர்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

அறுமுக வள்ளல் அவர்கள்மீது திருவருள்நோக்கஞ்செய்து திருக்கரமமைத்துத் தேற்றி, தமது ஆக்ஞையை எதிர்பார்த்துக் கொண்டு பக்கலில் நிற்கும் வீரவாகுதேவரைத் திருநோக்கஞ் செய்தருளி, யாகாக்கினியினின்றுந்தோன்றி இவர்கள்யாகத்தை அழித்து உயிர்களைக்கொன்று எங்குந்திரியாநின்ற அவ்வாட்டுக்கடாவை நீ

விரைந்து சென்று இப்பொழுதே பிடித்துக்கொண்டுவா” என்று பணித்தருளினர். வீரவாகுதேவர் எம்பெருமானுடைய ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு. அறுமுகனுடைய அருண சரணாரவிந்தங்களை வணங்கித் துதித்து விடைபெற்று ஆட்டுக்கடாவைத் தேடிச் செல்வாராயினர்.

அதுகாலை ஆட்டுக்கடாவானது, தேவர் முனிவர் முதலியோர் அஞ்சியோடினமையால் பூமியிலுள்ளாரைச் சிதைத்து, கீழ் ஏழுலகினுஞ்சென்று அங்குள்ளாரையும் வதைத்து, சுவர்க்கலோகம் முதலிய மேல் உலகங்களையுந் தன் கொம்பால் தகர்த்து நாசஞ்செய்து, பிரமனுலகமான சத்திய உலகத்தையடைந்து, இறுமாந்து ஆரவாரித்து நின்றது. வீரவாகுதேவர் பூமியினும், கீழ் ஏழுலகங்களினும் தேடிக்காணாமையால் மேலுலகங்களினுந்தேடிக் காணாது பிரமலோகஞ்சென்று தேடுங்கால், ஆங்கோரிடத்தில் வடவாமுகாக்கினி அநேக ஆயிரம்யோசனை உயர்ந்து பரந்து வளர்ந்தாற்போன்ற உடலையும், அதன்கொழுந்து நீண்டாற்போன்ற நாக்கையும், ஆலகாலவிடம் போன்ற கொம்புகளையும், இடியைப்போலொலிக்கும் குளம்புகளையும் வைரவூசிபோன்ற வான்மயிரையும், பல மேருமலைகளைப் பருக்கைக் கற்களாக்கி தன் காற்சிலம்புகளில் சேர்த்தாற்போன்ற அத்துணைப் பெரிய தோற்றத்தையுமுடைய ஆட்டுக்கடாவைக் கண்டார். இவரைக் கண்டவுடனே கடா குமுறிக்கிளம்பி எதிர்த்துவந்தது வீரவாகுதேவர் சிறிதும் அஞ்சாது அவ்வாட்டுக்கடா அஞ்சும்வண்ணம் உரப்பி, விரைந்துபோய் அதன் கொம்பைப்பற்றி காகாவென்று சத்தமுண்டாகுமாறு இழுத்துக்கொண்டுபோய் திருக்கைலாசமலையையடைந்து, அறுமுகத்தண்ணல்முன் அத்தகரை விடுத்துப் பணிந்துநின்றார்.

குமாரக்கடவுள் அதுகண்டு முறுவல்பூத்து, தேவர் முனிவர் திசைமுகன் திருமால் முதலியோரை நோக்கித் திருவாய்மலர்ந்தருளுவர். “அன்புடையீர்! ஆட்டுக்கடா நம்மிடத்து வந்துவிட்டது; இனி நீவிர் ஒரு சிறிதும் அஞ்சாது பூமியிற்சென்று நீங்கள் தொடங்கிய யாகத்தை இனிது முடியுங்கள்” என்று அருளிச்செய்தனர். அன்னவரெல்லாம் அதுகேட்டு துன்பவேலையினின்றுமெழுந்து இன்பவேலையில் மூழ்கிக் கூத்தாடிப் பரவசமுற்று, வந்த வினையகற்றும் கந்தநாயக! மாய இருட்படலத்தை மாற்றும் தூய அருட்கதிரே! தேவரீர் திருவருட்கோர் எல்லையுளதோ? அடியேங்கட்கு

இன்னும் ஓர் வரந்தரல்வேண்டும்; இவ்வாட்டுக்கடாவை வேறெங்கும் விடவொல்லாது; தேவரீர் வாகனமாகக்கொண்டருளல்வேண்டும். அடியேங்களும் மறையோரும் அஜாரூடராகிய தேவரீரைக் கண்டகாலத்தே, எங்கட்குண்டாகிய இடர்களை நீக்கியாண்ட பரம்பொருளிவரென்று நல்லறிவுற்று உய்தற்கேதுவாகும். வேண்டுவார் வேண்டியவண்ணம் வழங்கு வேதவித்தகரே! இவ்வரத்தை நல்கியருளவீர் என்று குறையிரந்தார்கள்.

ஏர்தரு தமரப்புத்தே ளிவ்வகை யிசைப்ப வன்றோர்
கார்தரு கண்டத் தெந்தை காதல வேள்வித் தீயிற்
சேர்தரு தகரி னேற்றைச் சிறியரே மெய்யு மாற்றல்
ஊர்திய தாகக் கொண்டே யூர்ந்திடல் வேண்டு மென்றார்.

பக்தாபீஷ்டவரதராகிய பார்வதி புதல்வர் அதுகேட்டுப் புன்னகைசெய்து "நாம இதனை வாகனமாகக்கொள்வேம் நீங்கள்போய் யாகத்தைமுடியுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். நாரதர் முதலியோர் யாவரும் முருகக்கடவுளை வணங்கிக்கொண்டு, பூதலத்தில் வந்து சிவாகமமுறைப்படி மந்திரமுறை வழாது யாகத்தை முடித்தார்கள். அவ்வண்ணமெல்லா முன்னருணற்றிய தவங்காரணமாக அத்தகரை வாகனமாகக்கொண்டருளினார். அதன்மேலேறி உலகமெல்லாம் பவனிவந்தனர். அக்காட்சியைக்கண்டார் அனைவர்களும் கண்ணுங் கருத்துங்களித்து கமலரைச் சிரமீது குவித்தும் போற்றிப்புகழ்ந்தார்கள். நாரதர் முதலியோர் யாகாதிபதியும், யாகபரிபாலனரும், யாகபலபிரதானரும் கந்தக்கடவுளே என்று தெளிவுற்றனர். "அக்னிபூ" என்று வேதங்களாற் பிரதிபாதிக்கப்படுகின்ற குமாரக்கடவுள் அதற்கியையவும், அவ்வுண்மையை எம்போன்றார் எளிதிலுணர்ந்துய்யவும், "சோதியே சுடரே சூழொளிவிளக்கே" என்ற தமிழ்மறைக்கிணங்கவும் அக்கினிதேவனுக்குள்ளேயிருந்து வசிக்கின்ற மூலாக்கினிதேவன் தானே என்பதைக் காட்டுதற்பொருட்டு, அக்கினிதேவனைப்போல் தாமும் ஆட்டுக்கடாவாகனமுடையராயினர். அதனால் அறுமுகச்சிவனை வேதங்கள் "அஜன்" என்று அழைக்கின்றன அருண (ஆடு) மூர்ந்த கருணை நாயகன் உலகெலாம் பவனிவந்தபின் அதினின்றுமிறங்கி திருக்கைலாசமலையில் பண்டுபோல் வீற்றிருந்தருளினார்.

அஜா மேகாம் லோகித சுக்ல க்ருஷ்ணாம்
பஹ்வீம் ப்ரஜாம் ஜநயந்தீம் ஸ்வரூபாம் !
அஜோ ஹ்யேகோ ஜுஷமாணோநு சேதே
ஜஹாத்யேநாம் புக்தபோகா மஜோந்ய: !!

(தொடரும்).

ஓம் குமராய நம.

கற்பு

(339-வது பக்கத் தொடர்ச்சி)

நாயகனும் நாயகியும் எக்காலத்தும் கருத்துவேறுபாடின்றி ஒற்றுமையாக இருக்கவேண்டும். அங்ஙனம் வாழும் வாழ்க்கையில் நாளுக்குநாள் இன்பமானது ஊற்றெடுத்து இல்வாழ்வு நல்வாழ்வாக விளங்கும். பெண்மணிகள் உள்ளன்புடன் தன் கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொண்டு வருவார்களாயின் ஒருவர்க்கொருவர் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு யாதொரு தடையுமிராது. நாயகன் ஒருசமயத்தில் தன் கருத்துக்கு மாறுபட்டால் அதனை மெல்லமெல்ல இதவசனங்களைக் கூறி பணிவாலும் நயத்தாலும் மாற்றவேண்டும். நாயகன் ஒன்றுசொன்னால் நாயகி ஒன்று சொல்வதும், அவன் ஒன்றைச் செய்யச்சொன்னால் இவள் ஒன்றைச்செய்வதும், அவன் வேண்டுமென்பதை இவள் வேண்டாமென்பதுமாக இருந்தால் அந்தக்குடும்பத்தில் எப்போதும் தீராத மனவேதனையே வளரும். சாந்தியும் சந்தோஷமும் ஒருபோதுமிரா. நாயகியின் மாறுபட்ட செய்கைகளைக்கண்டு நாயகனுக்கும் அவளிடத்தில் அன்பு நாளுக்கு நாள் திருப்தியற்றுப் பின் சத்துருவைப்போலத் தேய்ந்து முடிவில் விரோதியாகவே பாவிக்கிறான். அந்தத் தம்பதிகளுக்குள் எந்நேரமும் கலகந்தான் நடைபெறும். இதனால் கணவனுக்கும் துன்பம்; மனைவிக்கும் துன்பம். இருவரும் மனம் சாந்தியற்று துடித்துக் கொண்டிருக்கும். மனைவியைக் கண்டால் கண்ணுக்கு வெறுப்பு; அவன் சொன்னபடி இவள் கேட்பதில்லை; இப்படி நெடுநாள் இருந்து அவர்கள் இல்வாழ்க்கை துன்பவாழ்க்கையாக மாறி, அவன் இல்லறத்தை வெறுத்துத் துறவறத்தை மேற்கொள்ளுகிறான். உள்ளபடி மனத்துறவு ஏற்பட்டால் அவன் பரகதிக்கு வழிதேடுவான். குடும்பத்தில் மனைவியின் வேதனையைப் பொறுக்கமுடியாமல் " இவளுடனிருந்து படுவதைக்காட்டிலும் நாலு வீடுண்டு, ஒரு வோடுண்டு " என்று துறந்தவனாதலால், துறவு மார்க்கத்தின் தூய்மையையும் உணராது கெட்டு இரண்டு தன்மையையுமிழந்து பிறர் பழித்து நகையாடநிற்கிறான். கணவன் கதி இப்படியாக மனைவி

சிறிது துன்பமுண்டானவுடனே, "இந்த வாழ்விலிருந்து துன்புறுவதைக்காட்டிலும் இறந்து படுவதே மேல்" என்று துணிந்து கிணறு குளங்களில் வீழ்ந்து அவமே மடிகின்றனள். காமதேனுவின் பாலைக் கறந்துகொட்டியதுபோல, கிடைத்தற்கரிய இவ்வரிய மனிதப்பிறவியை முத்திவீட்டிற்கு வழிதேடாது வீணேயாக்கி விளிக்கின்றனர். அந்தோ! பரிதாபம். தற்கொலை செய்துகொண்டவர்கள் பல ஆயிரமாண்டுகள் இருள் உலகில் அலைந்து பைசாசமாகித் திரிந்துழன்று மீளா நரகுக்கு ஆளாகின்றனர்கள். இதனை யறியாத பேதைப்பெண்கள் சகிக்குந்தன்மையின்றித் தாமுமாண்டு, பிறமாதருக்குந் தன்னைப் போல் மடியுமாறு வழிகாட்டியாகின்றனர். "மெல்லியலாளொழுக்குந் தானின்ற காயங் கூற்றங்கூற்றமே இல்லற நிலைநொழுகாப்பெண்" என்ற முதுரைக்கு நாயகனை மடியுமாறு நடந்து இலக்கியமாகின்றனர். இவைகளுக்குக் காரணம் நல்லுணர்ச்சியில்லாமையே. அந்நல்லுணர்ச்சி பெற்றோராலும் பெரியோராலும் உயர்ந்த நீதிகளைப் போதிக்கும் அறிவு நூல்களாலுமே உண்டாகும்.

பெண்கள் தமது கணவரோடுகூடி வாழுங்காலத்தில் எல்லா சுக துக்கங்களுக்குங் காரணம் தமது ஒற்றுமையே. ஆதலால் சகோதரிகள் தமது இல்வாழ்க்கையில் அநுவிஷயத்தில் மிகுந்த ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எந்தக் காரியத்தில் ஒற்றுமை குறைகிறதோ அந்தக்காரியத்தைச் செவ்வைப்படுத்தி ஒழுகவேண்டும். நாளுக்கு நாள் தமது ஒற்றுமை வளர்ந்து வருவதற்குண்டான முறையை அநுசரிக்கவேண்டும். அதனால் இன்பமாகிய தரு வளர்ந்து செழித்துத் தழைத்தோங்கும். அதன் நிழலில் நாயகனும் நாயகியும் பகையென்னும் வெய்யிலின் துன்பமின்றிக்கூடி மகிழ்ந்திருக்கலாம். அத்தருவில் அன்பென்னும் பூங்காற்று மெல்ல வீசும்; சாந்தியென்கின்ற மலர்கள் மலரும்; சற்புத்திரபாக்கியம் என்கின்ற பழங்கள் பழுக்கும்; சகோதரிகளே! உற்று நோக்குங்கள். இந்த இன்பமாகிய மரத்திற்கு தண்ணீர் எது? ஒற்றுமைதான். ஒற்றுமை என்னும் தண்ணீரைவிட்டு அந்த இன்பமாகிய மரத்தை வாடவிடாமல் பாதுகாப்பது உங்கள் பொறுப்பாக இருக்கிறது. மரம் வாடி உலர்ந்துவிட்டால் காற்று, பூ கனி நிழல்முதலிய எந்த நற்பயன்களையும் பெற முடியாதல்லவா? கணவன் செல்வவந்தனாக வாழ்ந்தாலும் மகிழ்ந்து அவனுடைய சந்தோஷத்தில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும்; நித்திய தரித்திரனாகத் தாழ்ந்தாலும் அவனுடைய துக்கத்தில் பங்கெடுத்

றுக்கொள்ளவேண்டும். நளன், சக்கரவர்த்தியாக அரியணைமேல் வீற்றிருந்து அரசாண்டபோதும், ஒற்றுடையுடன் தனிவனம்போந்து மூர்க்க மிருகங்களின் துன்பத்தால் வாடியபோதும் கற்பரசியா கிய தமயந்தி நிழல்போல் தொடர்ந்திருந்து சுகதுக்கங்களை யனுபவித்தாளன்றோ? அந்நல்லவர் ஒழுக்கமே இன்னும் புக ழுடம்புடன் எங்கும் நின்று நிலவுகின்றன

நாயகன் ஒரு சமயத்தில் கோபியாகவும், ஞாயத்திற்கு மாறாகவும் நடப்பானேயானால் அப்போதுதான் பெண்கள் தமது முழு சகிப்புத்தன்மையும் உபயோகப்படுத்தி, மிக்க தாழ்மையாகவும் இதமாகவும் நடந்துகொண்டு, சாந்தமாக அவனை தன் குற்றத்தையும் மனைவியின் குணத்தையும் உணர்த்து, தன் குற்றத்தினின்றும் விடு பட்டு மீளவும் எக்காலத்தும் குணசீலனாகவே நின்று மாறாத அன் புடன் இருக்கத் தலைப்படுவன். தான் கோபமாக நடந்ததை எண்ணி நெஞ்சம் நெகிழ்வன். சகிப்புத்தன்மையும் ஒற்றுமையும் நன்கு புல னாக்கும்; இவ்வெடுத்துக்காட்டை உற்றுநோக்குக.

நடுநாட்டிலே பெண்ணையாற்றின்கரையிலே திருக்கோவலூர் என்னும் நகரம் சகல வளம்பெற்றுவிளங்கும் அந்நகரத்தை அற நெறிவழுவாது பிரதாபசீலன் என்னும் குறுநில மன்னனொருவன் அரசுசெலுத்திவந்தான். இவன் இறைசெல வழங்கி குடிகளைத் தாய் போல் புரந்துவந்தான். காணற்கினியனாய்க் காட்சிக்கெளியனாய்ப் பொறுமைக்கு உறைவிடமாய் விளங்கினான் செவியாற் பார்த்தும் கண்ணாற் பேசியும் நீதிக்கு மாறுபாடின்றி நடுநிலையாகத் தீர்ப்பு செய்வான். தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்ள ராலும், மிருகங்களாலும் துன்பம் நேராவண்ணம் பாதுகாத்துவந் தான். ஆற்றலொடு கடமைவாங்கி எல்லா மக்களுக்கும் உயிர்போ லும், தனத்தின் பொக்கிஷம்போலும் இருந்தான் அவனைப்புகழா தார் ஒருவருமில்லை எவர்களிடத்தில் நல்லொழுக்கமுளதோ அவர் களை உயிரினுஞ் சிறந்தவர்களாக எண்ணுவான். அவர்களோடு கலந்து உறவாடுவான். இத்தகைய மன்னர்பெருமான் நெடுநாள் மனையில்லாமல் தனித்திருப்பது குறித்துக் குடிகள் வருந்தினர். அறி வுடைப் பெருமக்கள் சிலர் அரசனிடம்போந்து வணங்கி, "கொடை அளி செங்கோல் குடிவோம்பலென்னும் நான்கையுமுடைய குரிசிலே! தண்ணருள்மிக்க தயாநிதியே! நீர் தனித்திருந்து அரசாள்வது நன் றன்று; இல்லறமே நல்லறமென்பது ஆன்றோர் துணிபு; ஆதலால்

தாங்கள் கற்பிற் சிறந்த காரிகையை மணந்து அரசாளுதலே சாலவும் சிறப்புடைத்தாம்" என்றனர். அதுகேட்ட மன்னன் நகைத்து, "நன்று நன்று கல்யாணம் புரிந்துகொண்டு கண்கலங்கி கருத்தழிந்து கவலையுற்றோர் கவலையுறுகின்றோர் எண்ணிலர், நான் அதனை விரும்பவில்லை. மனைவி கற்புடையவளாயமைந்தால்தான் இன்பம்; அமையவில்லையேல் அதைவிட நரகம் வேறொன்றுமில்லை; ஆதலால் இவ்விஷயத்தில் என்னை வற்புறுத்தாதீர்கள்' என்று கூறிவிட்டான். அதுகேட்ட அவர்கள் மீளவும் மறுத்துச்சொல்ல அஞ்சி வாளா இருந்துவிட்டனர். பின்னும் ஒரு காலத்தில் தமது எண்ணத்தை முற்றுவிக்க எண்ணிய அறிவுடையோர்கள் மன்னனிடமடைந்து வணங்கி, "வரையாது வழங்கும் வள்ளலே! தாங்கள் யார் எது கேட்டாலும் மறுக்காது நல்கும் பெருங்கொடையாளி, குடிகளின் குறைகளைநீக்கும் குணபூஷணர், எமக்கு நேர்ந்துள்ள குறையைநீக்கி ஒரு பெரும் பாக்கியத்தைத் தரவேண்டும்" மென்று குறையிரந்தனர். அதுகேட்ட மன்னன் "குடிகளுக்கு யாதொருகுறையும் உண்டாகா வண்ணம் கண்ணுங்கருத்துமாகக் காத்துவந்தோமே? அங்ஙனமிருக்க இப்போது என்னகுறை நேர்ந்திருக்கும்? அதனைக்கேட்டு உடனே அதை நீக்கவேண்டும்; குறைநேரவண்ணம் அரசாள்பவனன்றோ கொற்றவன்?" என்று பற்பல எண்ணி, "அறிஞர்களே! நுமக்கு யாதுகுறை? உமக்கு என்னவேண்டும்? கூறுங்கள்; உடனே அக்குறையை நீக்கி வேண்டியவற்றை வழங்குவன்" என்றான். குடிகள், "நற்றவத்தாற் கிடைத்த கொற்றவா பெரும! தங்களுக்குப்பின்னால் தம்மைப்போல் நீதிதவறாது அரசாள்வதற்கு ஓர் இளவரசர் இல்லையென்பதுதான் எமது பெருங்குறை; ஆதலால் தாங்கள் கருணைகூர்ந்து எமக்கோர் மகாராணியாரையும் அவர்கள் வயிற்றில் உம்மைப்போல் எம்மைக்காத்தருள ஓர் இளவரசனையுந் தந்தருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். மன்னன் அது கேட்டு மறுக்கமுடியாதவனாகி ஒருவாறு இணங்கினான். கற்பின் மிக்க கன்னிகையை மணப்பதாக உறுதிகூறினான். குடிகள் தமது எண்ணம் நிறைவேறியதாக எண்ணி உவகைபூத்தனர்.

மன்னன், செல்வத்தையும் குலத்தையும் பெரிதாக மதியாமல் குணத்தையே பெரிதாக மதித்தவனாதலால் எக்குலத்திற்பிறந்தாளாயினும் நல்லொழுக்கமும் நற்குணமும் பொருந்திய நங்கையை மணப்பேனென எண்ணி யாராய்ந்தான். திருக்கோவலூருக்கடுத்த ஆயர்

பாடியில் இடைக்கோன் என்கின்ற ஓர் இடையன் இருந்தான். அவனுக்கு ஒரு செல்வப்புதல்வியுண்டு, அவள் இயற்கையழகில் இலக்குமிக்கு நிகரானவள்; கோலஞ் சிறந்ததுபோல் குணமுஞ் சிறந்திருந்தது; பொறுமையில் பூதேவி நாணத்தக்கவள்; அவள் திருமேனியின் இயற்கைவனப்பைக்கண்டு தேவமாதர்களும் தலைகுனிவார்கள்; அவளது நற்குணத்தைக்கண்டு புத்தேளிரும் புகழுவார்கள்; பிரதாபசீலன் அவளைத் தேர்ந்தெடுத்துத் தனக்கு வாழ்க்கைத் துணைவியவளேயென்று நிர்ணயித்தான். அமைச்சர்களைவிட்டு இடைக்கோனை வரவழைத்தான்; தன் கருத்தை அமைச்சர்கள் மூலம் இடைக்கோனிடங்கூறி அவனது மகளைக்கேட்டான். அச்சமும் அதிசயமுங்கொண்டு இடைக்கோன் இறைவனை அஞ்சி

"முறைசெய்து காப்பாற்று மன்னன் மக்கட்கு
இறை யென்று வைக்கப்படும்"

என்ற பொய்யாமொழிக்குப் புகழ்தந்த புண்ணிய புருஷரே! சாந்தமிக்க வேந்தர் பெரும! "யார்க்கும் இன்முகப் பைம்பூணிறை" என்றபடி குடிகளுக்குத் தெய்வம் மன்னவனேயல்லவா? உயர்குடியிற்றோன்றிய தாங்கள் என்னைப் பொருள்படுத்திப் பெண்கேட்பது வியப்பினும் வியப்பே! தங்கட்கு சம்பந்தியாவதற்குக் குலத்தாலும் தனத்தாலும் கீர்த்தியாலும் பிறவாற்றாலும் தகுதியற்றிருக்கின்றேன்; அடியேனுடைய உடல் உயிர் பொருள் யாவும் தமது உடைமைகளே. ஆதலால் தங்கள் உடைமைகளில் ஒன்றாகிய என் பெண்ணை யான் எவ்வாறு தருவது? சுதந்தரமற்ற என்னைக்கேட்பது தங்கள் பெருந்தகைமையின் பெருமிதமே! ஆதலால் என் மகளைமட்டுமல்ல எனது ஆவியை வேண்டுமென்றாலுந் தருவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்" என்று பணிவாகவும் அழகாகவுங்கூறினான். அவனுடைய பொருளடங்கிய உரைகளைக்கேட்ட மன்னன் மகிழ்ந்து மணத்திற்கு நாள் முதலியவற்றை நிச்சயித்து, குறித்த நாளில் திருமணம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச்செய்தான். அரசர்கள் கூட்டங்கூட்டமாக வந்து குழுமினார்; எல்லாவகையாலும் அந்நகரத்தை அளகாபுரிபோல் அலங்கரித்தார்கள், ஆனால் குடிகளுக்குமட்டும் சிறிது அதிருப்தி, அரசகுலத்திற் பிறந்தவளை மன்னன் மணங்கொள்ளாது இடைச்சியை மணக்கப்போவதைக்குறித்து வருந்தினார்கள்; தடுப்பதற்கு ஆற்றலற்றுப் புழுங்கினார். குறித்த காலத்தில் பிரதாபசீல மன்னருக்கும் இடைக்கோனுடைய மகள் மங்கலவதிக்கும் திரு

மணம் சிறப்பாக நடைபெற்றது. தன் எண்ணம்போல் மனைவி வாய்த்ததற்கு மன்னன் மகிழ்ந்தார். அரண்மனையைச் சேர்ந்த பிரபுக்கள், அரசனது சுற்றத்தார்கள் முதலாயினோர் இறைவன் இழிந்த இடைச்சியை மணந்துகொண்டதைக்குறித்து வெறுத்தார்கள்; மறைவில் இழிவாகப் பேசினார்கள் குறிப்புணர்வதில் சமர்த்தனாகிய கொற்றவர் பெருமான இதனையுணர்ந்தான். இவர்களுக்கு நல்லறிவுபுகட்ட எண்ணினான். குலம்பெரிதல்ல குணமே பெரிது என்பதை உலகிற்கு வெளிப்படுத்தவும் எண்ணினான்.

பிரதாபசீலன் தன் காதலிபால் அன்புபூண்டு வாழ்ந்திருந்தான், மங்கலவதி தன் கணவனையே கடவுளாகக்கருதி உபசரித்துவந்தாள்; பதியின் சொல்லே வேதவாக்காகவும் பதியின் பாதசேவையே தெய்வசேவையாகவும் பதியின் திருவடியே சுவர்க்கலோகமாகவும் எண்ணி, அருந்ததிக்கு நிகரென்று அனைவரும் புகழ இனிது வாழ்ந்தாள். அரசன் அரசகுடும்பத்தார்க்கு இவளது கற்பின் பொற்பையுணர்த்த எண்ணி சின்னாள் கழித்து தன் உத்தம நாயகியாகிய மங்கலவதியை துன்பத்திற்காளாக்கினான். மங்கலவதி கருவுற்று ஓர் பெண்மகவை யீன்றாள். செல்வபுத்திரி பிறந்ததைக் கேட்ட மன்னன் மனைவியின்பால்வந்து, ‘மடமயிலே! உன்னை நான்மணந்து கொண்டதற்காக அரசகுடும்பத்தாரும் குடிகளும் என்னைப் பரிகசிக்கின்றார்கள்; நம்மிருவரையும் வேம்பைப்போல கருதுகிறார்கள்’ நம சீமந்தபுத்திரியைப்பார்த்து “இடைக்கோனுடைய பௌத்திரி திருக்கோவிலூரையாள்வாள்” என்று ஏளனம் செய்கிறார்கள்; நான் பழி சுமந்ததோடு என் மகளையும் பழிக்காளாக்க என் மனம் இசையவில்லை, குடிகள் மனமறிந்தரசுசெய்வதே மன்னர்கடமை; மகள் பழி சுமந்து உயிர்வாழ்வதை நான் விரும்பவில்லை; ஆதலால் குழந்தையைக் கொன்றுவிடக் கருதியுள்ளேன், நின் கருத்து யாது?’’ என்றான்.

மங்கலவதி! “அன்பின்வடிவாயமைந்த ஆருயிர்க்காதல! பதியின் வாக்கியமே வேதவாக்கியம்; தங்களுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதுவே எனக்கும் சரி; தங்களுக்கு வந்த இன்ப துன்பத்தில் எனக்கும் பங்குண்டு; உமக்குச் சந்தோஷத்தை யுண்டு பண்ணுவதே என்கடமை; இந்தப் புத்திரியல்ல வேறே எதுவானாலும் —உயிரையேனுந்தருகிறேன்; தங்கள் திருவுளமெப்படியோ அப்படியே செய்யலாம்” என்று கல்லுங்கரையுமாறு கனிவுடன் கூறினாள். இவ்வார்த்தைகள் பிரதாபசீலனுடைய மனத்தைப் பிளந்தது. கண்ணில் நீர்ருவி பெருகிற்று; அவைகளை அவன் சிரமப்பட்டுமறைத்துக்கொண்டு மனைவியிடம் விடைபெற்று நீங்கினான்.

(தொடரும்).

மகன் தாய் தந்தைக்காற்று முதவி

சச்சிதானந்தம்

[மாத்ரு தேவோபவ பித்ரு தேவோபவ]

௯-, ௧௯௨௮ -- சிசாமலவி 11 அனு ...

சாந்தமிகும் சபைச் சீலர்களே !

என்றென்று நெடுங்காலமாக எண்ணிலாத பல பிறவிகளை எடுத்தெடுத்திளைத்தோம்; இப்பொழுது பெறுதற்கரிய பிறவியாகிய மனிதப்பிறவியைப் பெற்றுளோம். இம்மனிதயாக்கையால்தான் நாம பெறுதற்கரிய பேற்றை யடையமுடியும். அயனொடு மாலும் தேடித் தேடிக் காணொணாத தேவதேவனுடைய திருச்சீரடியில் இருமாந்தமர்ந்திருக்க இவ்வாக்கை ஒரு வழிகாட்டியேயாகும். இவ்வரும் பிறவியை நாமடைவதற்கு அநுகாரணமாக இருந்தவர் மாதாபிதாக்கள். ஆகவே தாய்தந்தையரிடத்தில் மக்கள் ஒழுகவேண்டிய ஒழுக்கத்தைப்பற்றிச் சிறிது வரைகுவோம் என்ற பேராவலுடையவனாயினேன். இப்பெரியதோர் விஷயத்தை மாதரு பித்ரு பக்தியிலலாத அடியேன் எழுதுவது இழுக்காமெனினும், சேற்றினுட் பிறந்த தாமரையையும் இப்பியிற் பிறந்த முத்தையும் எவ்விதம் பெரியோர்கள் ஏற்றுக்கொள்வார்களோ அவ்விதம் இதனையும் ஏற்றுக்கொள்வீர்களாக.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

(தாய்தந்தை செய்யும் நன்றி)

நமது வேதங்களும் பெரியோர்களும் மக்கட்குத் தாய்தந்தை தெய்வம் என்று கூறுகின்றனர். மாதாபிதாக்களைக்காட்டிலும் அன்னியமாக மற்றொரு தெய்வம் மக்களுக்கு இல்லையென்பதற்குக் குணம் நிறைந்த முனிவர்களுஞ் சாக்ஷி கூறுவார்கள். அவர்களைக்காட்டிலும் சிறந்த வஸ்து ஒன்று உண்டானதும் இல்லை; உண்டாகப்போகிறதுமில்லை. ஆகவே மனிதனுக்குத் தாய்தந்தையரைவிடச் சிறந்த வஸ்து மூன்றுலகங்களிலும் இல்லை. நம்மைப் பெறுவதற்காக அநேக தானதருமங்கள் புரிகின்றனர்; சரீரம் இளைத்துப்போகும்படி விரதமிருக்கின்றனர்; குழந்தையைவேண்டித் தமது மெல்லிய பாதங்கள் கல்லிலும் முள்ளி

லும் அடிபட்ட யாத்திரைபுரிகின்றனர்; இவ்விதம் தவமாதவமிருந்து கர்ப்பம் உண்டானபிறகு தாயானவள் மாம்பழமுதலிய கனிவர்க்கங்களை சாப்பிடுவது கிடையாது உண்டியைச் சுருக்குகிறாள்; கர்ப்பம் நாசமடையாமலிருக்கவேண்டுமேயென்று விசாரப்படுகிறாள், மூன்றுவது மாதத்தில் மசக்கை என்னும் நோயால் மிகுந்த துன்பத்தையடைகிறாள்; மாதங்கள் ஏற ஏற அநேகவிதமான துன்பங்களை அநுபவிக்கிறாள்; 9-வது மாதத்தில் திரும்பிப் படுப்பதாயிருந்தால் மெள்ள அமர்ந்து பிறகு படுக்கிறாள்; நடக்கமுடியாமல் தவிக்கிறாள்; கர்ப்பத்தினால் தாய்படும்பாடுகள் எண்ணிலடங்காவென்பது மிகையாகாதன்றோ? குழந்தை வெளிப்படுங்காலத்தில் அளவில்லாத வருத்தத்தையடைகிறாள்.

"வந்திப்பரிவாய் மகனைப் பெறுந்துயரம்
நொந்தறிவாளோ நுவல்" — நீதிவெண்பா.

தாயுமானப்பெருந்தகையார்

'பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளைப்
பேறப் பேதை யறிவாளோ"

என்றனர். குழந்தை மலஜல விசர்ஜனம்செய்தால் கொஞ்சங்கூட அசங்கதமில்லாமல் எடுத்தெறிகிறாள், குழந்தைக்கு ஏதேனும் வியாதி வந்தால் தான் மருந்து சாப்பிட்டு பத்தியமிருக்கிறாள், தூக்கத்தை வெறுத்துவிடுகிறாள், குழந்தை இளைத்துப்போனால் சந்திகளில்கழிப்பு கழித்துப்போடுகிறாள்; குழந்தையை முன்னிட்டு சிறுதெய்வங்களையும் வந்திக்கிறாள்; குழந்தை பாலருந்தாவிட்டால் கண்ணீர்விட்டழுகிறாள், குழந்தையின் சௌக்கியத்திற்காக தாழ்ந்தவர்களைக்கொண்டும் மந்திரித்து கயிறுகட்டிக்கொள்ளுகிறாள்; குழந்தை சாப்பிடாமுன் தான் சாப்பிடமாட்டாள், மகன் பள்ளிக்குச்சென்று வீட்டுக்குத் திரும்பிவர சிறிது காலதாமதமானால் இன்னும் என் அருமைக் கண்மணி வரக்காணோமே? பசியினால் வாடுவானே? என்று பரிதபித்து அடிக்கடி வாசலில் வந்து பார்க்கிறாள். குழந்தை சாப்பிடாவிட்டால் "அப்பா வருவார் பழம் வாங்கிவருவார்" என்று இனிய வார்த்தைகளைக்கூறி அன்னம் அருந்தச்செய்கிறாள்; சில தாய்கள் குழந்தைக்கு சலதோஷம் உண்டானால் அடிக்கடி மூக்குச்சிந்தினால் நாசி வலிக்குமேயென்றெண்ணி வாயினாலும் உறிஞ்சுகின்றனர்; ஆ! என்னே! மாதாவின் கருணை. அவர்கள் பரிவுதான் என்னே! குழந்தையினால் தன்னுயிரையும் திரணமாக மதிக்கின்றனர்; கவிசாதுர்யத்திலுள்ள

பலவகைகளையும் நைஷதகாவியத்தில் காணலாம். நைஷதம் இயற்றியவர் ஸ்ரீஹர்ஷகவி; இவருடைய தகப்பனாகிய ஸ்ரீஹீரன் ஒரு ராஜ சபையில் வித்வானாக இருந்தார். ஒருநாள் வேறு தேசத்திலிருந்து ஒரு வித்வான் அரச சபைக்கு வந்தனர். அவர் தம்முடைய திறமையினால் ஸ்ரீஹீரனை ஜயித்தார். தோல்வியுற்ற ஏக்கத்தினால் ஸ்ரீஹீரன் காலமானார். அந்நாளன்று ஸ்ரீஹர்ஷர் சிறுகுழந்தையாக இருந்தார். இவர் தாயாராகிய மாமல்லாதேவிக்கு ஸ்ரீஹீரன் சிந்தாமணி மந்திரத்தை உபதேசித்திருந்தார். அம்மந்திரத்தை ஜபித்தவர்கட்கு சரஸ்வதி கடாக்ஷமுண்டாகும். மாமல்லா தேவியானவள் தன் குழந்தைக்கு அச் சிந்தாமணி மந்திரத்தை சொல்லி வைத்தாள். அக் குழந்தையானது எப்பொழுதும் அம்மந்திரத்தை கூறிக்கொண்டே இருக்கும். வாமாசாரப் பிரயோகங்களில் சவத்தின்மேலிருந்துகொண்டு ஒரு மந்திரத்தை ஜபித்தால் அதிகபலன் உண்டாகுமென்று மாமல்லாதேவிக்குத் தெரியும். ஒருநாள் படுத்துக்கொண்டிருக்கும்பொழுது தன் மார்பின்கண் குழந்தையை வைத்துக்கொண்டாள். குழந்தையானது மந்திரத்தைக் கூறிக்கொண்டிருந்தது. எப்படியாவது நம் குழந்தை அபிவிருத்தி யடைந்து சமானமில்லாத வித்தையடைந்தால் போதும்; நம்முடைய உயிர் போனாலும் போகட்டும் என்று நினைத்து மாமல்லாதேவியானவள் தன் கழுத்தை வெட்டிக்கொண்டாள். தாயின் சவத்தின்மேலிருந்து குழந்தை மந்திரத்தைக்கூறவே உடனே சரஸ்வதிகடாக்ஷமுண்டாகி யாவர்களாலும் புகழப்பெற்ற பெரும்புலமைவாய்ந்தது. அவர்தான் பிறகு நைஷதகாவியத்தை இயற்றினார். குழந்தைக்கு ஏதேனும் சில ஆபத்துக்கள் உண்டானால் மாதாக்கள் தன்னுயிரையும் மாய்த்துக்கொள்ளுகிறார்கள். விபவவருஷம் ஐப்பசிமாதம் ஆறும் நாள் காங்கேயநல்லூரில் எமது தகப்பனாரால் முருகப்பெருமானுடைய திருவாலயத்தில் திருக்கோபுரம் புதுக்கிக்கொண்டிருக்கும்பொழுது எமது தமயனார் ஸ்ரீசைலவாசர் அக்கோபுரத்தின்மீது ஏறினார்; மழையால் வழுக்கி அறுபதடி உயரத்திலிருந்து தவறிவிட்டார். எம் தாயாராகிய ஸ்ரீமதி கனகவல்லியம்மையார் மகன் கோபுரத்தின் மேலிருந்து விழுந்தான் என்று கேட்டவுடனே மரணத்திற்குத் தகுந்த மூர்ச்சையடைந்து கீழே விழுந்தார்கள்; பற்களெல்லாம் கிட்டிவிட்டன; அவ்வூரிலுள்ளோரனைவரும் இம்மாது பிழைக்கமாட்டாளென்று கூறினார்கள்; குறைந்தபட்சம் அரைமணிநேரம் வரைக்

கும் அம்மூர்ச்சை தெளியவே இல்லை. ஆனால் விழுந்தவருக்கு காயங்கள் ஒன்றும் ஏற்படவில்லை. தாயாருக்குக் குழந்தையின்மீதுள்ள அன்பை அஞ்ஞான்று யான் கண்டேன். 1937-வருஷத்தில் திருவனந்தபுரம் மார்க்கமாகச் சென்றுகொண்டிருந்த ஒரு புகைவண்டியில் ஒரு மாது, தன் குழந்தைக்கு வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தாள்; எவ்விதமோ குழந்தை தவறிவிட்டது, குழந்தையின் தாயானவள் பிள்ளையின்மேல் வைத்த அன்பால் மகனே என்று குழந்தையைத் தாவி கீழேவிழுந்தாள். குழந்தைக்குச் சொற்பகாயங்கள் ஏற்பட்டன; தாய் உயிர் துறந்தனள் என்று சுதேசமித்திரன்பத்திரிகையில் கண்ணுற்றோம். இவைபோல் இன்னும் அநேக சரித்திரங்களைக் கண்டும் கேட்டுமுள்ளோம். ஆகவே குழந்தைகள் துன்பப்படத் தாய்தந்தைகள் மனஞ்சகிக்கமாட்டார்கள். தமக்கு யாது துன்பம் வந்தபோதிலும் மகனுக்குத்தெரியாவண்ணம் தாமேயனுபவிக்கின்றார்கள். ஆகாரம் சிறிது கிடைத்தால் அதனை மகனுக்குத் தந்து தாய் தந்தைகள் பட்டினியாக இருக்கின்றார்கள். தாய் தந்தைகள் செய்யும் நன்றியை யாரே கூறவல்லார்? குழந்தையினால் மாதாபிதாக்கள் படுந்துன்பம் அளவிடமுடியாது. இதனாலல்லவோ முற்றத்துறந்த முழுஞானியாகிய பட்டினத்தடிகள்

"முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
யந்திபக லாச்சிவனை யாதரித்து—தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாய்" என்றும

"வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்" என்றும்

"நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே—யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்" என்றும்

அருணகிரிநாதர்

தந்தபசி தனையறிந்து முலை யமுது
தந்து முதுகு தடவிய தாயார் என்றும்

கூறியவற்றால் அறியக்கிடக்கின்றதன்றோ?

துற்புத்திரன் இயல்பு.

இப்படி வெகுபாடுபட்டு வளர்த்த தாய்தந்தைகட்கு சில மக்கள் துன்பத்தைப் புரிகின்றனர். மனைவி வந்தபிறகு மாதாபிதாக்களு

டைய மூப்பைப் பார்ப்பதே கிடையாது. அவர்கட்குக் குடிக்கத் தண்ணீர் கொடுப்பதும் இவனுக்குச் சுமையாக இருக்கிறது; காலையில் எழுந்தவுடன் தாய்தந்தையரை வசை பாடுகின்றனர்; "தந்தைதாய்ப் பேண்" என்னும் அமுதவாக்கை மறந்து, தாய்தந்தையரைக் காப் பாற்றுதல் தன் கடமையென்பதை மாற்றுகிறார்கள்; படிப் பித்த குரங்கு சொன்னபடியாடுவதுபோலவும், கூண்டிலடைக்கப்பட்ட கிளி கற்றுக்கொடுத்தபடி கூறுவதுபோலவும், மனைவி படுக்கையில் சொல்லிக்கொடுத்தபடி தாய்தந்தையரிடத்தில் பேசுகிறான்; தான் சம்பாதித்து அவர்களுக்குச் சோறிடுவது கிடையாது, தனம் வஸ் திரம் ஆபரணம் எல்லாவற்றையும் மனைவி சரீர வுபயோகத்திற்கே சமர்ப்பிக்கின்றான். அந்தோ! அருமையாகப் பெற்றுவளர்த்த தாய் தந்தைகளின் ஞாபகமே இருக்கிறதில்லை, தாயதந்தையரை வேலைக்கார ரைப்போல் நினைக்கிறார்கள். இன்னும் சிலமக்கள் தன் அழுக்கு வஸ் திரத்தைத் தோய்க்கும்படி தாயாருக்குக் கட்டளையிடுகிறார்கள். இந்த இரண்டு கிழட்டுப்பிணங்களும் தொலைந்துபோகவில்லையே? என்று கூறுகின்றார்கள்; நல்ல உணவு தருவது கிடையாது; நல்ல ஆடை தருவது கிடையாது; தாய்தந்தையைப் பார்க்கும்பொழுதே முணு முணுக்கிறார்கள்; மாதாபிதாக்கள் பசியால்வாடத் தானும் தன் மனைவியும் வயிறு வெடிக்க உண்டு உறங்குகின்றனர். மனைவியின் இனிய வார்த்தையாகிய விஷங்கலந்த தேனைக்குடித்து அதனால் புத் தியை மயக்கிக்கொண்டு, வயதுமுதிர்ந்த பெற்றோர்களை நோக்கி, "ஊருக்கு வருகிறது உங்களுக்கு வரவில்லையே? என்று சினந்து அவர்களைத் தனியே அலையவிட்டு, பொருளையெல்லாம் எடுத்துக் கொண்டு, தானும் தன்மனைவியும் வேறோரிடத்திற்குக் குடிபோகின்ற னர். அந்தோ! கொடிது!! கொடிது!!! சில மக்கள் பிதாமாதாக் களை அடிக்கிறார்கள்; இவர்களா உருப்படப்போகிறார்கள்? இதுவோ மக்களுக்கு அழகு? இவர்களை மனிதராக எண்ணலாமா? "மனிதனை மனித னறிவான் மடநாயைத் தடிக்கொம்பறியும்" என்னும் பழமொழிக் கிணங்க, இவர்களை மாக்களதான தம் இனம் என்று சேர்த்துக் கொள்ளவேண்டும், மக்கள் அல்ல என்பது இழுக்காகாது. பெற் றோர்கள் செய்த உபகாரத்திற்கு இவர்கள் செய்வதா பிரதியுபகாரம்? "நன்றி மறவேல்" என்னும் அருமையான திருமொழிக்கு மேற்கோட் காக சொற்பொருளைமட்டும் நோக்கினால் நீ தாய்தந்தைக்குச் செய்ய வேண்டிய நன்றியை மறவேல் என்றும், உனக்குப் பெற்றோர்கள்

செய்த நன்றியை நீ மறவேல் என்றும் பழய பாட்டி கூறியிருக்கின்றாள்.

ஒன்றொரு பயனை யுதவினோர் மனம்
கன்றிட லொருவினை கருதிச் செய்வரேல்
புன்றொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடு மல்லது கூறல் வேண்டுமோ

எனனும் கந்தபுராணச்செய்யுளை சிந்திக்கப்படாதா? தாய்தந்தைகள் மனம் நொந்தால் வாழுவார்களா? "மாதா வயிறெரிய வாழா ரொருக்காலும்" என்று ஆன்றோர் மொழிந்திருக்கின்றனரே? எவனொருவன் ஈன்றோரை நிந்திக்கிறானோ அவன் மறுபிறவியில் ஊமையாகப்பிறக்கிறான்; பெற்றோர்கள பசியால வாட எவன உண்டுஉறங்குகின்றானோ அவனுக்குத்தான் பைத்தியம்பிடிக்கிறது: கடுஞ்சொல்கூறுகிறவனுக்கு நாக்குப்புற்று உண்டாகிறது; அடிப்பவர்கட்குத்தான் தொழுநோயுண்டாகிறது; தாய் தந்தையைக் கோபத்தினால் கண் சிவந்து பார்க்கிறவனுடைய கண்களை இயமதூதுவர்கள் அக்கினியினாற் காய்ச்சிய ஊசிகளைக்கொண்டு குத்துகின்றனர்; அவர்களுக்கு ஏவல்செய்யக்கூசின பாவியை இயமதூதுவர்கள சுடுகின்ற தாமிர நீரை அவர்கள் சரீரம் நடுங்கி அலறும்படி அவர்கள்மீது வார்ப்பார்கள்; எமபுரத்தில் படுகிற துன்பம எழுதொணாது.

பாரதத்தில்

"தாவர்நல்லுரை மறுப்பினும் . . . .
இரவியுள்ளளவும் மதியமுள்ளளவும்
இவர்களே நரகி லெய்துவார்"

என்று கூறப்பட்டுளது

மகன் ஆற்று முதவி.

ஆகவே தாய்தந்தைக்கு ஒருநாளும் துன்பம் செய்யப்படாது; அவர்கள் மனம் வருந்துமாறு யாதொரு காரியத்தையும செய்யப்படாது; அவர்கள் இஷ்டத்துக்கு மாறாக நடக்கப்படாது. இரண்டாயிரம் வருடத்திற்கு முன் சங்கரபகவத்பாதாள் சன்னியாஸம் பண்ணிக்கொள்ள நினைத்தார்; ஆனால் அவருடைய தாயாரோ தன்னுடைய ஒருபிள்ளைக்கு மணஞ்செய்து பார்க்கவேண்டுமென்று மிகவும் ஆசையுடையவளாக இருந்தார். ஆகையால் சன்னியாசம் வாங்கிக் கொள்ளுகிறேனென்று சொன்னால் தாயாருக்கு மிகவும் துக்கமுண்டாகுமே ? என்று நினைத்தாராம்; ஆகவே பெற்றோர் இஷ்டம் இல்

லாமல் ஒரு காரியத்தையும் செய்யப்படாது. ஒரு கருமம் புரிய ஆரம்பிக்கும்போது தாய்தந்தையை வணங்கியே தொடங்கவேண்டும். இதனை பிரம்மாவின் அவதாரமாகிய திருவள்ளுவர் முப்பால் கூறத்தொடங்கும்போது

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு

என்று தன் தாய்தந்தையராகிய ஆதியையும் பகவனையும் தோத்திரஞ் செய்து ஆரம்பித்தார் என்றும் ஊகித்தற் கிடமிருக்கிறதல்லவா? காலையில் எழுந்தவுடன் பெற்றோர்களைத் தூரத்திலிருந்து வணங்கி அவர்கள் விரும்பினால் நெருங்கிவரவேண்டும். அவர்கள் சன்னிதியில் நிமிர்ந்தும் பார்க்கப்படாது.

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை

— ஆசாரக்கோவை.

மக்கட்குத் தாய்தந்தை கூறும் நல்வாக்கே வேதவாக்கு; பெற்றோர்களே மூன்றுலகங்களுமாவர், தாய்தந்தையரைப் பூசிப்பதால் புண்ணியலோகங்களைப் பெறுகிறார்கள்; அவர்களைப்பூசிப்பதால் மூன்று லோகத்திலும் கீர்த்தியுண்டாகிறது; அவர்களைப் பூசிப்பதால் மும்மூர்த்தியும் பரமசந்தோஷத்தை யடைகிறார்கள்; தாய்தந்தையைத் தெய்வம்போல்நினைத்து சதாசர்வகாலமும் பூசிக்கவேண்டும்; ஈன்றோரைத் தவிர வேறு தெய்வம் இல்லை, அவர்கள் சம்மதிபெறாமல் ஒரு காரியத்தையும் செய்யப்படாது; தாய்தந்தைக்குப் பணிவிடை செய்வதே சிறந்தவேலையென்று பணிசெய்யவேண்டும்.

மாதரம் பிதரஞ்சைவ ஸாக்ஷாத் ப்ரத்யக்ஷ தேவதாம்
மத்வா க்ருஹீ நிஷேவேத ஸதா ஸர்வப்ரயத்நத:

என்றும், நீதிநெறிவிளக்கத்தில்

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்று
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்

என்றும், நான்மணிக்கடிகையில்

ஈன்றாளின் என்ன கடவுளு மில்

என்றும், கூர்மபுராணத்தில்

தாயினிற் சிறந்த தெய்வமில்லை யுயர் தந்தை தன்னில்
ஓதுநற் குருவு மில்லை யுன்னில் மற்றிவர்க டாளில்

தூய்மலர் தூவி நாளுந் தொழுதிடு மற்றோர் தாமே
ஆய்கதிர் பாப்பு போன்றுட் டமரா யினிது வாழ்வார்

என்றும் கூறுமாறறுலுணர்க.

கவுரவத்துக்குரிய யாவருக்குள்ளும் தாயே அதிக கவுரவத்துக் குரியவள்; தாய் பூமியைவிட குருத்துவமுடையவள்; அப்படியே தந்தை வானத்தைவிட அதிக உயர்ந்தவர்.

குருணாஞ்சைவ ஸர்வேஷாம் மாதா பரமகோ குரு
மாதா குருதரா பூமே:காத்பிதோச்சதரஸ் ததா

என்று கூறப்பட்டுள்ளது. தாய்தந்தைகள் மனங்கோணுமல் நடத் தல்வேண்டும்; வெந்நீரினுல் பெற்றோர்களுக்கு அபிஷேகஞ் செய்ய வேணடும்; அவர்கள் வஸ்திரத்தைத் தன காத்தினுல தோய்க்கவேண் டும்; அவர்களுக்கு இனிமையான உணவு தாவேணடும்; அவர்கள் உண்டபிறகு தான் உணவுகொள்ளவேண்டும். பெற்றோர்களுக்குத் தன் காத்தினுல் படுக்கை விரிக்கவேண்டும்; பிதாமாதாக்களின் பாதத்தை மெலலப்பிடிக்கவேண்டும்; ஈன்றோர்கள் உறங்கின பிறகு தான் உறங்கவேண்டும, அவர்களிடத்தில நயமாக வார்த்தை சொல்லல்வேண்டும்; வயதுமுதிர்ந்த காலத்தில் தாய்தந்தைகள் படுக் கையிலேயே மலஜலங்கழித்தால் சிறிதுகூட அசங்கதமில்லாமல்—முகம் சுளிக்காமல் சுத்தப்படுத்தவேண்டும், பவ்வியம்பட்ட உடை களையெல்லாம் தோய்த்து உலர்த்திவைக்கவேண்டும்; புத்திமாறுட் டத்தால் ஏதேனும் தன்னைவைதாலும அவையெல்லாம் ஆசீர்வாத மென்று நினைத்துச் சுடுமுகத்தைக்காட்டாமல் பொறுத்துக்கொளல் வேண்டும்; புத்திதடுமாற்றத்தினுல் சிலசமயம் தன்னையடித்தாலும் "அப்பா ஓங்கியடித்தால் அந்த அதிர்ச்சியினுல் தங்கள் கைவலிக் குமே" என்று இனிமையாகப் பரிவுடன் கூறவேண்டும்; பெற்றோர் கள் செய்த நன்றிக்கு மக்கள் நூறுண்டுவரைக்கும் தொண்டுபுரிந்தா லும் ஒருநாள வளர்த்ததற்கு சமானமாகாது.

ஈன்று வளர்த்த தாய்தந்தைக் கேவரோ கைம்மா றியற்றிடுவார்
ஆன்ற மதலை நூறுவய தளவு மடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ளபொருண் முற்றுமளித்து முறைமுறையே
ஏன்று வழிபா டியற்றியற்றிடினு மொருநாள் வளர்த்தற் கிணையாதே

யம்மாதாபிதரௌக்லேசம் ஸஹேதே சம்பவேந்ருணும்
நதஸ்யநிஷ்க்ருதி: ஸக்யாகர்தும் வர்ஷசதைரபி

என்பவற்றுலறிக.

தாய்தந்தையர்க்குப் பணிவிடை செய்வதே சிறந்த தவம்; பெற்றோரை நிராகரித்துக் கானகத்திற் சென்று அருமையாகத் தவஞ்செய்தாலும் தேவர்களும் முனிவரும் இகழ்வார்கள்.

காசிகாண்டத்தில்

"தந்தை தாய் பணிவிடை செய்யுந் தவமலாற் றவம்வே றில்லை"

என்றும், உபதேசகாண்டத்தில்

ஈன்றதாயினை யின்புறத் திருபுயத் தினைத்தும்
ஆன்ற தந்தையை யார்த்தநசெய் தகன்றுபோ யடவி
தோன்றி மாதவந் தொடங்கினோ ரிவர்களைத் தொல்லை
மூன்று தேவரு முனிவரு நிமயுந் திழிவார்

வருமாறு காண்க.

ஆகவே பெற்றோர்கள் எந்தக்குடிசையில் வாழ்கின்றனரோ அந்தக்குடிசையே சிறந்தகோயில்; அவர்கள் கூறும் நல்லுபதேசமே சிறந்த மந்திரம்; அவர்கள் வாழுகின்ற நாடே அமரர் வாழும் பொன்னாடு.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை"
"தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை"
"தந்தைசொன் மிக்க மந்திரமில்லை"

என்னும் அருள்வாக்குகளை நினைமின்கள்; அவர்கள் காலநிலையடைந்தபிறகு நீர்க்கடன்களை முறைப்படி செய்யவேண்டும்; ஊரிலுள்ளோரனைவரும் "இக்குழந்தையைப் பெற்ற தாய் தந்தைகள் என்ன மாதவஞ்செய்தனரோ" எனப்புகழ

மகன் தந்தைக்காற்றுமுதவி இவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்

என்ற பொய்யில் புலவர் திருவாக்கிற்கு இலக்கியமாகத் திகழ்தல் வேண்டும்.

ஓம் தத் ஸத்:

இரவல்

A. திருநாள். சமயபுரம்.

(328-ம் பக்கத் தொடர்ச்சி.)

உண்டவுடன் படுத்திருந்த சாய்வான நாற்காலியை நாற்காலிக்குச் சொந்தக்காரரைத் தண்ணீர் கொண்டுவர அனுப்பிவிட்டு வண்டியில் எடுத்துப்போட்டுக்கொள்ளுவதையும், உண்ணும்போது மேலே உலாத்தப்பட்டிருக்கும் வஸ்திரத்தைப்பார்த்து இது மிகவும் நன்றாய் இருக்கிறதே! நீர் தீபாவளிக்குக்கூட என்னை மறந்துவிட்டீரே என்று சொல்லிவிட்டு சாப்பிட்டவுடன் அந்த வஸ்திரத்தை எடுத்துக்கொள்வதையும், என்னுடைய குழந்தையின் உடுப்பு சிறிதாக இருப்பதால் இவ்வூரில் இம்மாதிரி துணியில்லாததால் உங்கள் ஊர் கடையில் தைத்துக்கொண்டுவாரும் என்று சொல்வதையும், அரிசி, கரும்பு, வெல்லம் இவைகளைக் கொடுக்கவேண்டுமென கட்டாயப்படுத்தி வாங்கிக்கொள்ளுவதையும் எந்த இனத்திற் சேர்ப்பதென்பதை வாசகர்கள் அறிந்ததென நம்புகிறேன்.

துவிச்சக்கரவண்டியை இரவல் கேட்பதும் கொடுப்பதும் சகஜந்தான். ஊரார் வீட்டு "பைசைக்கிளில் ஏறி உட்கார்ந்துவிட்டால், ஒரு தனிவேகந்தான். குதிரைசவாரி செய்வதைப்போல் வேண்டுமென்றே உடம்பைத் தூக்கித்தூக்கிப்போட்டுக்கொண்டு, கல்லிலும், முள்ளிலும், வெகுவேகமாயக் கவலையில்லாது போவது ஒரு வித்தையன்று. சிலசமயங்களில் ரப்பர் குழாய்களில் சிறைவைக்கப்பட்டிருக்கும் வாயு பகவானையும் விடுதலை செய்துவிடுவர். பிறருடைய வண்டிகளிற்றான் இவர்கள் சர்க்கஸ் பயிற்சிகள் கற்றுக்கொள்வது இவ்வளவு ஜாக்கிறதையாகக் கையாளப்பெற்றால் நாம் இரவல் கொடுத்த பொருளின் நிலையைச் சொல்லவும் வேண்டுமோ?

ஒருவர் வீட்டுக்குத் தன் மருமகனோ உறவினர்களோ வந்துவிட்டால் வீட்டிலுள்ள பெண்கள் பக்கத்து வீடுகளுக்குப்போய் கூசாமல் தங்கநகைகளையும், வெள்ளிப்பாத்திரங்களையும் இரவல் வாங்கிக்கொண்டுவந்து ஷோக்பண்ணிவிடுகிறார்கள். திருப்பிக்கொடுக்கும்போது ஏதாவது ஒன்று பின்னமாகப்போவது வழக்கம். உடனே கிளம்பிவிடுகிறதையா! பெரிய இந்தியப்பெண்களின் யுத்தம (சச்சரவு). நம்வீட்டுப்பெண்கள் சிறிது நேரம் வாங்கி விருந்தினருக்காக பகட்டினது நமக்கு ஆபத்தாய் நம்முடைய மானம் கால் காசுக்கு விற்றுப்போகிறது

கிராமபோன் இரவல் கேட்பது மன்னிக்கத்தக்கதே. சங்கீதப் பறவைகள், மிருகங்கள், மனிதர்கள் ஆகிய எல்லோரையும் வசீகரித்துவிடுகிறது. அன்று! அன்றையதினம் உங்கள்வீட்டில் "காந்தியோ பரம ஏழை சந்நியாசி" என்ற பாட்டைக் கேட்கச்சொன்னீரே? என்ன அது மகா இனிமையாயிருந்தது? உங்கள் மெஷினை ஒரு நாளைக்கு இரவல் கொடுங்கள்; எனது வீட்டில் என் சம்சாரம், பெண், மகன், தாயார், எல்லோரும் அந்தப் பாட்டைக்கேட்க மிகுந்த ஆவலுள்ளவர்களாய் இருக்கிறார்கள்; ரிக்கார்டுகளைவைத்து முடிந்தவுடனேயே கொடுத்துவிடுகிறேன் என்கிறார் நம் நண்பர். நாமும் தட்ட முடியாமல் கொடுத்துவிடுகிறோம். அவருடைய வீட்டில் அப்போது காந்தியடிகளின் கடவுள் தத்துவத்தைப்பற்றின பேச்சை யாவரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்போது, அவ்விடம் கிராமப் போன்குழாய்க்குள் தலையை விட்டுக்கொண்டு கேட்கும் ஒருவன் பாஷாபிமான மிகுதியால் "இது என்னத்திற்கு இந்த இங்கிலீஷ் பிளேட்" என்று சொல்லி, ரிக்கார்டை இறுகப்பிடித்து நிறுத்திவிடுகிறான்; அவ்வளவே, அங்கே ஒரு கீறல் விழுந்துவிடுகிறது; இந்த இடத்திற்கு ஊசிவந்ததும் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறது. இவ்விதம் நான் சொல்வது பொய்யென்று வாசகர்களுக்குத் தோன்றினால் உடனே இரவல் கிராமப்போன் வாங்கி, ரிக்கார்டில் ஒரு கீறல் இழுத்து, அதற்கு நேராக ஊசியை நிறுத்திப்பாருங்கள்; ஓர் வேண்டுகோள்—சந்தேக நிவர்த்திக்காக இரவல் வாங்கவேண்டிய சிரமத்தை தியாகம்பண்ணவேண்டும்.

இப்படி அநேகமாதிரியான இரவல்கள் உலகத்தில் மலிந்துகிடக்கின்றன. மிகவும் முக்கியமானவைகளையும் விலை உயர்ந்தனவுமான பொருள்களை, ஒருவருக்கும் இரவல் கொடுக்கவே கூடாது. புத்தகங்கள், பத்திரிகைகள் ஆகியவைகளை இரவல் கேட்பது இழிவினும் இழிவு. சொந்தமாக வாங்கிப் படித்து இவைகளின் வளர்ச்சியை விரும்புதல் தனவான்களாகவுள்ள பெரியோர்களின் கடமையாகும்.

இரவல் கொடுப்பவர்களே! உங்களிடமும் குற்றமிருக்கிறது; இரவல் கொடுத்தாற்றானே அவர்களும் வாங்குகின்றார்கள்; நீங்கள் ஏன் கொடுக்கின்றீர்கள்? கொடுத்துவிட்டுத் திரும்பிவரும்போது "அதில் சொத்தை இதில் சொள்ளை" என்று ஏன் கலகத்திற்காளாகவேண்டும்? கொடுத்துவிட்டுப் பொல்லாதவனாய்ப் போவதைவிட, கொடாமலேயே பொல்லாதவனாயிருப்பது நலம் என எனக்குத் தோன்றுகின்றது. இரவல் கேட்பதையே தொழிலாகக்கொண்ட தனவான்களாகயிருக்கும்பெரியோர்கள் என்மீது சினந்துகொள்வது பிசகு என்பதைக்கூறி எனது வார்த்தைகளையும் நிறுத்திக்கொள்ளுகின்றேன். "வாழ்க சீரடியாரெல்லாம்"